இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

வெள்ளிக்கிழமை 22-11-2024

# விவசாயிகளைப் பற்றி பழனிசாமி பேசலாமா?

எடப்பாடி பழனிசாமி, விவசாயிகளை வைத்து தனக்குப் பாராட்டு விழா நடத்தி இருக்கிறார். அதில் நானும் ஒரு விவசாயி என்றும், விவசாயிகளை தனது ஆட்சிக் காலத்தில் பாதுகாத்தேன் என்றும் சொல்லி இருக்கிறார். பச்சைத் துண்டு போட்டுக் கொண்டு 'பச்சைப் பொய்'களை அவிழ்த்து விட்டு இருக்கிறார் பழனிசாமி. இவரது ஆட்சிக் காலத்தில் விவசாயிகள் வேதனையும் வெம்பலும்தான் பட்டார்கள் என்பது அவர்களுக்கே தெரியும். இதனை எல்லாம் விவசாயிகள் மறந்திருப்பார்கள் என்று நினைத்து பொய் மூட்டைகளை அவிழ்த்து விட்டு வருகிறார் பழனிசாமி.

**விவசாயிகளை நிலத்தில் இருந்து விரட்டுவதற்காக மோடி அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட மூன்று வேளாண் சட்டங்களை ஆதரித்ததைவிட பழனிசாமியின் துரோகத்துக்கு எடுத்துக்காட்டு வேண்டுமா?**

**தனியார் மண்டிகளிடம் விளைபொருட்களை தேக்கி வைக்கும் தந்திரம் இந்தச் சட்டத்துக்குள் இருப்பதாக விவசாயிகள் குற்றம் சாட்டினார்கள். வேளாண் உற்பத்திப் பொருள்களை, குறிப்பாக கோதுமை மற்றும் நெல் கொள்முதலை அரசு படிப்படியாகக் குறைத்து, கடைசியில் கொள்முதல் செய்வதையே நிறுத்திவிடும் என்றும், அதனால் மார்க்கெட்டை இயக்கும் சக்தியாக இருக்கப் போகும் தனியாரைச் சார்ந்தே தாங்கள் இருக்க வேண்டியிருக்கும் என்றும் விவசாயிகள் குற்றம்சாட்டினார்கள்.**

**குறைந்தபட்ச ஆதார விலை (எம்.எஸ்.பி.) நடைமுறை கைவிடப்படுவதால் விவசாயிகள் தான் சிரமத்துக்கு ஆளாவார்கள் என்றும் விவசாயிகள் அஞ்சினார்கள். ஆனால் இந்தப் போராட்டத்தை கொச்சைப்படுத்தியவர்தான் பழனிசாமி. இந்தச் சட்டத்தை ஆதரித்து பொது வெளியில் பேசிய ஒரே முதலமைச்சர் பழனிசாமிதான்.**

போராடும் விவசாயிகளை 'புரோக்கர்கள்' என்றார். "மூன்று வேளாண் சட்டங்களால் என்ன தீமை?" என்று கேட்டார். "மூன்று சட்டங்களுக்கு ஆதரவாக யாருடனும் நான் விவாதிக்கத் தயார்" என்றார். விவசாயிகளின் எதிர்ப்பை தாங்க முடியாத பா.ஜ.க. அரசு பணிந்தது. சட்டங்களை திரும்பப் பெற்றது.

தி.மு.க. ஆட்சி மலர்ந்ததும், "மூன்று சட்டங்களும் நமது நாட்டின் வேளாண் வளர்ச்சிக்கும், விவசாயிகளின் நலனுக்கும் உகந்ததாக இல்லை என்பதால், அவை ஒன்றிய அரசினால் ரத்து செய்யப்படவேண்டும் என இந்தச் சட்டமன்றப் பேரவையில் ஒருமனதாக இத்தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது" என்று தீர்மானம் கொண்டு வந்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

பா.ஜ.க. இந்தத் தீர்மானத்தை எதிர்த்து வெளிநடப்பு செய்ததைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஏனென்றால், இந்த மூன்று சட்டங்களையும் ரத்து செய்யும் தீர்மானத்தை அவர்களால் ஆதரிக்க முடியாது. ஆனால் விவசாயி வேடம் போட்டு வந்த அ.தி.மு.க. எதற்காக வெளிநடப்பு செய்ய வேண்டும்? ஆட்சியில் இருக்கும் போது பதவியைக் காப்பாற்றிக் கொள்ள பா.ஜ.க.வுக்கு பயந்தார்கள். இப்போதும் பயந்து நடுங்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

இதே போன்ற துரோகத்தைத்தான் காவிரிப் பிரச்சினையிலும் பழனிசாமி செய்தார். காவிரி இறுதித் தீர்ப்பு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோதுதான் - 2007 ஆம் ஆண்டு வந்தது. 192 டி.எம்.சி.தான் என்று தீர்ப்பு வந்தது. அனைத்துக் கட்சிக் கூட்டம் போட்டு அனைவர் முடிவின் படி நீதிமன்றத்தில் வழக்குப் போட்டார் முதல்வர் கலைஞர். காவிரி மன்றத்தையும் நாடினார். காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டும் என்று சொன்னார். 2017ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தில் இறுதி விவாதம் வந்தபோது அ.தி.மு.க. அரசு சரியாக வாதிடவில்லை. அழுத்தமான வாதங்களை வைக்கவில்லை. நமது மாநிலத்தின் ஜீவாதாரப் பிரச்சினை இது என்பதைச் சொல்லவில்லை. இந்த வழக்கின் இறுதித் தீர்ப்பு 2018 ஆம் ஆண்டு வந்தது. அதன்படி காவிரி ஆணையம் அமைக்கப்பட்டு உடனடியாக நீர் தாவா முறைப்படுத்தப்பட்டு இருக்க வேண்டும்.

கர்நாடக மாநிலத்தின் தேர்தலை மனதில் வைத்து மத்திய பா.ஜ.க. அரசு இதனைச் செயல்படுத்தவில்லை. அப்போது முதலமைச்சராக இருந்த பழனிசாமியும் ஒன்றிய அரசைக் கேட்கவில்லை.

**காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டும் என்று போராடியதும் தி.மு.க.தான். தமிழகம் வந்த பிரதமருக்கு தி.மு.க. கருப்புக் கொடி காட்டியது. காவிரி உரிமை மீட்புப் பயணத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்டார்கள். 'காவிரி மேலாண்மை வாரியம்' என்ற பெயரால் டெல்லியில்தான் அமைக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் சொன்னது தி.மு.க. பா.ஜ.க. அரசு அதிகாரமற்ற ஒரு அமைப்பைத் தொடங்கி, அதனை ஒன்றிய அரசின் ஜல்சக்தி துறையோடு சேர்த்துவிட்டார்கள். அதையும் எடப்பாடி அரசு தட்டிக் கேட்கவில்லை. இவர்தான் இன்று விவசாயி வேடமிடுகிறார்.**

**''விவசாயிகள் கடனை ரத்து செய்ய மாட்டேன்'' என்று சொல்லி உச்சநீதிமன்றம் வரை போனவர்தான் பழனிசாமி. காவிரியில் உரிமையை நிலைநாட்டாதவர்தான் பழனிசாமி. டெல்டா மாவட்டத்தில் ஹைட்ரோ கார்பன் திட்டத்துக்கு எதிராகப் போராடிய விவசாயிகளை ஒடுக்கியவர்தான் இந்த பழனிசாமி. வேளாண் மண்டலம் என்பதை போலியாக அறிவித்து, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ஹைட்ரோ கார்பன் திட்டங்கள் செயல்படும் என்ற சதி செய்தவர்தான் இந்த பழனிசாமி. 'கிசான்' திட்டத்தில் போலி நபர்களைச் சேர்த்து முறைகேட்டுக்கு உதவிய ஆட்சிதான் பழனிசாமி ஆட்சி. குடிமராமத்துப் பணிகளில் ஊழல் செய்த ஆட்சிதான் பழனிசாமியின் ஆட்சி. நீர் வள உரிமையைப் பறிக்கும் ஜல்சக்தி திட்டத்தை ஆதரித்தவர்தான் பழனிசாமி. அணை பாதுகாப்பு உரிமையை விட்டுத் தந்தவர்தான் பழனிசாமி. இவர் விவசாயிகளைப் பற்றிப் பேசலாமா?**

**பழனிசாமி விவசாயி அல்ல; கபட வேடதாரி என்பது விவசாயிகளுக்கே தெரியும். பயிருக்கும் களைக்கும் வித்தியாசம் தெரிந்தவர்கள்தான் விவசாயிகள்!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (21.11.2024) சென்னை, திருவான்மியூரில் நடைபெற்ற மு.க.முத்து – திருமதி சிவகாமசுந்தரி தம்பதியரின் மகள்வழிப் பேத்தியும், சி.கே.ரங்கநாதன் – திருமதி தேன்மொழி ரங்கநாதன் தம்பதியரின் மகளுமான தரணீஸ்வரி – ஆகாஷ் ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, தயாநிதி மாறன் எம்.பி., பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நடிகர்கள் விக்ரம், சிவகார்த்திகேயன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

### இயக்குநர் பி.அமிர்தம் வரவேற்புரை! ஜி.ராமானுஜம் முன்னிலை! புரட்சித் தமிழன் சத்யராஜ் ஏற்புரை!

# முத்தமிழ்ப் பேரவை பொன்விழா ஆண்டு இசை விழா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் விருதுகள் வழங்கி – நூலை வெளியிட்டு விழாச் சிறப்புரை!

சென்னை, நவ. 22-

சென்னை-28, இராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் கலையரங்கில் முத்தமிழ்ப் பேரவையின் பொன் விழா ஆண்டு இசை விழா - விருதுகள் வழங்கும் விழா 24.11.2024 - ஞாயிறு மாலை 4.30 மணியளவில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் முத்தமிழ்ப் பேரவைச் செயலாளர் இயக்குனர் பி.அமிர்தம் வரவேற்புரையாற்றுகிறார்.

முத்தமிழ்ப் பேரவைத் தலைவர் ஜி.ராமானுஜம் முன்னிலை வகிக்கிறார். விழாவில் 'கலைஞர்' விருது பெறும் புரட்சித் தமிழன் சத்யராஜ் ஏற்புரையாற்றுகிறார்.

இவ்விழாவில் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கி, திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் அவர்களின் வாழ்க்கை சரிதம் நூலை வெளியிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விழாச் சிறப்புரையாற்றுகிறார்.

மிருதங்கச் செல்வம் - கலைமாமணி டாக்டர் திருவாரூர் பக்தவத்சலம் நன்றி கூறுகிறார்.

24.11.2024 ஞாயிறு மாலை 4.30 மணியளவில் - மங்கள இசையுடன் தொடங்கும் இவ்விழாவில் கலைமாமணி திருப்பாம்புரம் சகோதரர்கள் டி.கே.எஸ்.மீனாட்சி சுந்தரம், டி.எஸ்.என்.சேஷகோபாலன் ஆகியோர் நாதஸ்வரமும், கலைமாமணி திருப்பங்கூர் டி.ஜி. முத்து குமாரசாமி, சுவாமி மலை சி.குருநாதன் ஆகியோர் சிறப்பு தவிலும் இசைக்கின்றனர்.

மாலை 6 மணியளவில் - விருது வழங்கும் விழா நடைபெறுகிறது.

கலைஞர் விருதை - புரட்சித் தமிழன் சத்யராஜியும், ராஜரத்னா விருதை - திருப்பாம்புரம் டி.கே.எஸ்.மீனாட்சி சுந்தரமும், இயல் செல்வம் விருதை - ஆண்டாள் பிரியதர்ஷினியும், இசைச் செல்வம் விருதை - முனைவர் காயத்ரி கிரீஷும், நாதஸ்வரச் செல்வம் விருதை - திருக்கடையூர் டி.எஸ்.எம்.உமா சங்கரும், தவில் செல்வம் விருதை - சுவாமி மலை சி.குருநாதனும், கிராமியக் கலைச் செல்வம் விருதை - முனைவர் தி.சோமசுந்தரமும், நாட்டியச் செல்வம் விருதை - பார்வதி ரவி கண்டசாலாவும் பெறுகின்றனர்.

நவ.25,26,27 மூன்று நாட்கள் இசை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

25.11.2024 திங்கள் மாலை 5.30 மணியளவில் - கலைமாமணி நாதஸ்வரச் செல்வம் திருக்கடையூர் டாக்டர் டி.எஸ். முரளிதரன், திருக்கடையூர் டி.எஸ்.எம்.உமா சங்கர் ஆகியோர் நாதஸ்வரமும், தாராபுரம் வி.எம்.கணேஷ் தவில் இசை கலா ரத்னாகரம், இடும்பாவனம் கே.எஸ்.கே.மணிகண்டன் ஆகியோர் தவிலும் இசைக்கின்றனர்.

மாலை 6.30 மணியளவில் - ஷண்முக சங்கீத சிரோன் மணி விக்னேஷ் ஈஸ்வர் பாட்டும், சாயிரக்ஷித் வயலினும், மிருதங்கச் செல்வம் சங்கீதா கலாநிதி, கலைமாமணி டாக்டர் திருவாரூர் பக்தவத்சலம் மிருதங்கமும், பிஸ்மில்லாகான், யுவபுரஷ்கார் விருதாளர் அனிருத் ஆத்ரேயா கஞ்சிராவும் இசைக்கின்றனர்.

மாலை 7.45 மணியளவில் - தமிழ்நாடு கிராமியக் கலைகள் வளர்ச்சி மையம் வழங்கும் கலைமாமணி தி.சோமசுந்தரம் குழுவினரின் கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

26.11.2024 - செவ்வாய்க் கிழமை மாலை 5.30 மணியளவில் - செம்பனார் கோயில் வித்வான் எஸ்.ஆர்.ஜி.எஸ். மோகன்தாஸ், திருமயிலை கே.செல்வம் ஆகியோர் நாதஸ்வரமும், கலைமாமணி மன்னார்குடி எஸ்.ஆர்.வாசுதேவன் சிறப்பு தவிலும், தவில் செல்வம் திருக்கடையூர் டி.ஜி.பாபு தவிலும் இசைக்கின்றனர்.

மாலை 6.30 மணியளவில் - அக்கரை சகோதரிகள் எஸ்.சுபலட்சுமி, எஸ்.சொர்ணலதா ஆகியோர் பாட்டிசைக்கின்றனர். விட்டல் ரங்கன் வயலினும், டெல்லி சாய்ராம் மிருதங்கமும் பி.ஸ்ரீசுந்தரகுமார் கஞ்சிராவும் இசைக்கின்றனர்.

மாலை 7.45 மணியளவில் - கலைமாமணி பார்வதி ரவி கண்டசாலா, கலா பிரதர்ஷினி நடனப் பள்ளி மாணவிகளுடன் பரத நாட்டியமாடுகிறார்.

27.11.2024 புதன்கிழமை - மாலை 5.30 மணியளவில் - சங்கீத நாடக அகாடமி யுவபுரஸ்கர் விருதாளர்கள் சின்னமனூர் முனைவர் ஏ.விஜய் கார்த்திகேயன், இடும்பாவனம் வி.பிரகாஷ் இளையராஜா ஆகியோர் நாதஸ்வரமும் தவில் செல்வம் திருக்கடையூர் டி.ஜி.பாபு சிறப்பு தவிலும், கலைஞான சிகரம் இடும்பாவனம் கே.எஸ்.கே.மணிகண்டன் தவிலும் இசைக்கின்றனர்.

மாலை 6.30 மணியளவில் - முனைவர் காயத்ரி கிரிஷ் பாட்டும், பி.அனந்தகிருஷ்ணன் வயலினும், என்.சி.பரத்வாஜ் மிருதங்கமும் இசைக்கின்றனர்.

மாலை 7.45 மணியளவில் - கலைமாமணி குரு முத்தரசி ரவி, கலைக்கோயில் நாட்டியப் பள்ளி மாணவிகளுடன் பரத நாட்டியமாடுகிறார்.

இவ்விழாவில் அனைவரும் பங்கேற்று விழாவினை சிறப்பிக்க வேண்டுமாய் விழாக் குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

### சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்ற சைக்கிளிங் வீராங்கனைகள்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் வாழ்த்துப் பெற்றனர்!

**சென்னை, நவ.22–**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் இந்திய சைக்கிளிங் கூட்டமைப்பு ஒன்றிணைந்து நடத்திய 76வது தேசிய டிராக் சைக்கிளிங் சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த சைக்கிளிங் வீராங்கனைகள் நேற்று முன்தினம் (20.11.2024) சந்தித்து பாராட்டும், வாழ்த்தும் பெற்றனர்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 15.11.2024 அன்று செங்கல்பட்டு மாவட்டம், மேலக்கோட்டையூரில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள சைக்கிளிங் ஓடுதளத்தில், 76வது தேசிய டிராக் சைக்கிளிங் சாம்பியன்ஷிப் போட்டியை தொடங்கி வைத்தார்.

இப்போட்டி ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளில் யூத் (Youth): 12 14 வயதுக்கு உட்பட்டோர், சப் ஜூனியர் (SubJunior): 15 16 வயதுக்கு உட்பட்டோர், ஜூனியர் (Junior): 17 18 வயதுக்கு உட்பட்டோர், எலைட் (Elite): 19 வயது மேற்பட்டவர் என தலா நான்கு உட்பிரிவுகளை கொண்டு நடத்தப்பட்டது. இப்போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 41 வீரர், வீராங்கனைகள் உள்பட, 28 மாநிலங்கள், 8 யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 700 க்கும் மேற்பட்ட சைக்கிள் பந்தய வீரர்கள் பங்கேற்றனர்.

76வது தேசிய டிராக் சைக்கிளிங் சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்ற சைக்கிள் பந்தய ஓடுதளம், SDAT யால் ரூ.1 கோடியில் புதுப்பிக்கப்பட்ட சைக்கிள் ஓட்டுதல் Velodrome ஆகும். இது தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளை நடத்தும் வசதி கொண்ட சைக்கிள் பந்தய ஓடுதளமாகும். 333.333 மீட்டர்கள் கொண்ட இந்த சைக்கிளிங் டிராக், மிக முன்னோடியான, உலகத் தரம் வாய்ந்த (ஓட்டுதல் தடங்களில்) ஒன்றாகும்.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் மூலம், தகுதியான 11 சைக்கிளிங் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு சுமார் ரூ.1 கோடியே 67 லட்சம் உயர் தர அதிநவீன பந்தய சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. இவர்கள் இந்த போட்டியில் முழு ஈடுபாட்டுடன் கலந்து கொண்டு வெற்றிகளை பெற்றனர்.

76வது தேசிய டிராக் சைக்கிளிங் சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழ்நாட்டை சேர்ந்த சைக்கிள் பந்தய வீராங்கனைகள் செல்வி. ஹாசினி, செல்வி.ஜெய் ஜோஷ்னா, செல்வி.தபிதா ஆகியோர் கொண்ட குழுவினர் டீம் ஸ்பிரிண்ட் (TEAM SPRINT) போட்டியில் சப் ஜூனியர் பிரிவில் தங்கம் வென்றனர்.

500 மீட்டர் தனிநபர்களுக்கான (INDIVIDUAL) சப் ஜூனியர் பிரிவில் டைம் டிரையல் (TIME TRIAL) போட்டியில் செல்வி.தபிதா தங்கப்பதக்கத்தையும், செல்வி.ஜெய் ஜோஷ்னா வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

17 - 18 வயதுடைய ஜூனியர் பிரிவில் 3,000 மீட்டர் பந்தய தூரம் கொண்ட டீம் பெர்ஷூட் (TEAM PURSUIT) போட்டியில் செல்வி.தன்யதா, செல்வி.கார்த்தியாயினி, செல்வி.நிறைமதி, செல்வி. பூஜா ஸ்வேதா ஆகியோர் கொண்ட குழுவினர் தங்கப் பதக்கம் வென்றனர்.

17 - 18 வயதுடைய ஜூனியர் பிரிவில் டீம் ஸ்பிரிண்ட் (TEAM SPRINT) போட்டியில் செல்வி.தன்யதா, செல்வி.நிறைமதி, செல்வி.பூஜா ஸ்வேதா ஆகியோர் கொண்ட குழுவினர் தங்கப்பதக்கம் வென்றனர்.

மேலும் தனிநபர் போட்டிகளான ஸ்க்ராச் பந்தய (SCRATCH RACE) மற்றும் இன்டிவிஜிவல் பெர்ஷியூட் (INDIVIDUAL PURSUIT) போட்டிகளில் செல்வி.தன்யதா வெள்ளிப்பதக்கம் வென்றார். தனிநபர் போட்டியான கெய்ரின் (KEIRIN) சைக்கிளிங் போட்டியில் செல்வி.பூஜா ஸ்வேதா வெள்ளிப்பதக்கத்தையும் வென்றார். 76வது தேசிய டிராக் சைக்கிளிங் சாம்பியன்ஷிப் போட்டியில் பெண்கள் ஜூனியர் பிரிவில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தை பிடித்தது.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி மற்றும் தமிழ்நாடு சைக்கிளிங் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.